

## 1. நாமக்கல் மாவட்டம்

» நாமக்கல் மாவட்டமானது சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்து **01.01.1997** முதல் தனி மாவட்டமாக உதயமானது.

» நாமக்கல் மாவட்டம் **3,368.21** சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது. இதில் வனப்பகுதி **512.5** கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது, இது மொத்த பரப்பளவில் **%15.4** ஆகும்.

» நாமக்கல் மாவட்டமானது நிர்வாக பணிகளுக்காக இரண்டு வருவாய் கோட்டங்களாகவும், **8** வட்டங்களாகவும், **31** குறுவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

» ஊரக நிர்வாகத்திற்காக இம்மாவட்டம் **5** நகராட்சிகளாகவும், **15** ஊராட்சி ஒன்றியங்களாகவும், **19** நகர பஞ்சாயத்துக்களாகவும், **322** கிராம பஞ்சாயத்துக்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

**வட்டங்கள்**

1. நாமக்கல்
2. இராசிபுரம்
3. கொல்லிமலை
4. சேந்தமங்கலம்
5. பரமத்திவேலூர்
6. திருச்செங்கோடு

7. குமாரபாளையம்
8. மோகனூர்

நாமக்கல் மாவட்டத்தின் வடக்கு பகுதிகள் மலைப்பிரதேசமாகவும், தெற்கு பகுதிகள் சமவெளிகளாகவும் காணப்படுகின்றன.

**எல்லைகள்**

நாமக்கல் மாவட்டத்தின் வடக்கு திசையில் சேலம் மாவட்டமும், கிழக்கில் திருச்சி மாவட்டமும், தெற்கில் கரூர் மாவட்டமும், மேற்கில் ஈரோடு மாவட்டமும் உள்ளன.

**தனிச்சிறப்புகள்**

» நாட்டின் பெரும்பாலான பகுதிகளுக்கு அனுப்பப்படும் முட்டைகள் நாமக்கல் பகுதியில் உற்பத்தி செய்யப்படுவதால், நாமக்கல் 'கோழிகள் நகரம்' என்றும் 'முட்டை நகரம்' என்றும் அழைக்கப்படுகிறது.

» நாமக்கல் நகரில் அமைந்துள்ள மலைக்கோட்டையானது இந்நகரத்தின் சிறப்பம்சமாகும். இக்கோட்டையானது சமதளமான பகுதியில் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

» நாமக்கல் மாவட்டத்தின் தோட்டம் எனப்படுவது கொல்லிமலை. கொல்லிமலை 371.03 சதுர கி.மீ. பரப்பளவில், கடல் மட்டத்திலிருந்து 1300 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. கொல்லிமலையில் 'ஆகாய கங்கை' என்னும் பிரபலமான அருவி அமைந்துள்ளது.

» லாரிகளுக்கு கூடு கட்டும் தொழிலின் காரணமாக நாமக்கல் இந்திய வரைபடத்தில் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. இத்தொழில் நாமக்கல்லின் தனிச்சிறப்பு.

» மேலும் லாரிகள், இழுவை இணைப்பு வண்டிகள் (trailor) மற்றும் சமையல் எரிவாயு கொண்டு செல்லும் டேங்கர் வகை லாரிகள் போன்ற பலவகை லாரிகள் நாமக்கல் மாவட்டத்தில் உள்ளன. இதன் காரணமாக நாமக்கல் 'போக்குவரத்து நகரம்' என்றும் அழைக்கப்படுகிறது.

» புகழ்பெற்ற நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை நாமக்கல் நகரத்தில் பிறந்தவராவார். இவரது நினைவாக நாமக்கல் நகரத்தில் இவரது பெயரில் மகளிருக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி நிறுவப்பட்டுள்ளது.

» பிரசித்தி பெற்ற நாமக்கல் ஆஞ்சநேயர் சுவாமியின் சிலையானது 6.7 மீட்டர் உயரம் கொண்டது. அச்சிலை 996 கி.பி.யில் செதுக்கப்பட்டதாகும்.

» திருச்செங்கோடு நகரமானது வரலாறு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்த நகரம் ஆகும்.

» 19 ஆம் நூற்றாண்டில் திருச்செங்கோடு 'புலவர் சங்கம்' என்னும் தமிழ் கலைக்கழகத்தின் இருப்பிடமாக திகழ்ந்துள்ளது. திருச்செங்கோடு நகரத்தில் அமைந்துள்ள அர்த்தனாரீஸ்வரர் ஆலையம் ஒரு புனித தளமாகும்.

» நாமக்கல் மாவட்டத்தின் மற்றொரு முக்கியமான வட்டமாக இராசிபுரம் வட்டம் திகழ்கிறது. இராசிபுரம் நகரத்தின் பிரதான தொழிலாக ஆடை நெய்தல் உள்ளது. இவ்வட்டத்தின் மற்றொரு முக்கியமான தொழிலாக ஜவ்வரிசி தயாரிப்பு உள்ளது.

இங்கு தயாரிக்கப்படும் ஜவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு மாவு ஆகியவை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நெய் தயாரிப்பும் இராசிபுரம் வட்டத்தின் ஒரு முக்கிய தொழிலாக விளங்குகிறது.

» பரமத்திவேலூர் வட்டத்தில் புகழ்பெற்ற காவிரி ஆறானது செல்கிறது. இதனால் ஆற்றுப்பாசனம் உள்ள நிலங்கள் பரமத்தி மற்றும் மோகனூர் ஒன்றியங்களில் அமைந்துள்ளன.



## 2. சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டம் **1772**ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சேலம் மாவட்டம் **5237** சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது.

இம்மாவட்டத்தில் இருந்து பிரிந்ததே நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள் ஆகும். இவை பிரிப்பதற்கு முன் சேலம் மாவட்டமே, தமிழ்நாட்டின் பெரிய மாவட்டமாக இருந்தது. சேலம் மாவட்டம், மாம்பழங்களை பயிரிடுவதில் மிகவும் பிரபலமானது.

சேலம் மாவட்டம் சேலம், ஆத்தூர், மேட்டூர், சங்ககிரிஎன **4** வருவாய் கோட்டங்களையும், **13** வருவாய் வட்டங்களையும், **44** உள்வட்டங்களையும், **655** வருவாய் கிராமங்களையும் கொண்டுள்ளது.

சேலம் மாவட்டம் சேலம் மாநகராட்சி உள்ளிட்ட **4** நகராட்சிகளையும், **33** பேரூராட்சிகளையும் கொண்டுள்ளன மற்றும் **20** ஊராட்சி ஒன்றியங்களும், **385** கிராம ஊராட்சிகளும் உள்ளன.

### எல்லைகள்

சேலம் மாவட்டத்திற்கு வடக்கே தர்மபுரி மாவட்டமும், தெற்கே திருச்சி மற்றும் நாமக்கல் மாவட்டமும், கிழக்கில் விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களும்,

மேற்கில் ஈரோடு மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலமும் உள்ளது.

**வட்டங்கள்**

1. சேலம்
2. சேலம் மேற்கு
3. சேலம் தெற்கு
4. வாழப்பாடி
5. ஏற்காடு
6. ஆத்தூர்
7. கங்கவள்ளி (கெங்கவல்லி)
8. பெத்தநாயக்கன்பாளையம்
9. மேட்டூர்
10. ஓமலூர்
11. காடையாம்பட்டி
12. சங்ககிரி
13. எடப்பாடி

**தனீச் சிறப்புகள்**

» கொங்கு நாட்டில் அமைந்துள்ள சேலம், மாம்பழத்திற்கு பெயர் பெற்றது. அங்கு விளையும் மல்கோவா மாம்பழம் மிகவும் பிரசித்தி பெற்றது.

» சேலம் மாவட்ட அரசு அருங்காட்சியகம் ஓமலூர் சாலையில் அமைந்துள்ளது.

» வணிகத்துறையில் சிறந்து விளங்கும் சேலம் தமிழ்நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரத்தில் உயிர்நாடியாக விளங்குகிறது.

» சேர்வராயன் மலைத்தொடரில் அமைந்துள்ள ஏழைகளின் ஊட்டி எனப்படும் ஏற்காடு சேலத்திலிருந்து 35 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. ஏற்காடு 383 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. நில மட்டத்திலிருந்து 1515 மீட்டர் உயரத்தில் இருக்கிறது.

» சேலம் மாநகராட்சியானது தென்னிந்திய இரயில்வே கோட்டத்தின் தலைமை இடமாகும்.

» சேலம் இரும்புக்கு மிகவும் பிரபலமான ஒரு நகரம்.

» இந்த மாவட்டத்தில் கோழிப் பண்ணைகளும் அதிக அளவில் உள்ளன.

» சேலம் இரும்பாலை, இந்திய உருக்கு ஆணையத்தின் சிறப்பு எஃகு பிரிவு சேலத்தில் அமைந்துள்ளது, இது குளிரூட்டப்பட்ட எஃகு மற்றும் சூடான உருட்டப்பட்ட எஃகு / கார்பன் எஃகு ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது. கூடுதலாக நாட்டின் முதல் தரமான நாணயம் தயாரிக்க வெற்று வட்டங்கள் 3600 டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.



## 3. அரியலூர் மாவட்டம்

» அரியலூர் மாவட்டம், பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு, 23.11.2007 முதல் தனி மாவட்டமாகச் செயல்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டம் 1,949.31 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டுள்ளது.

» அரியலூர் மாவட்டம், அரியலூர், உடையார்பாளையம் ஆகிய இரு கோட்டங்களையும், அரியலூர், செந்துறை, உடையார்பாளையம், ஆண்டிமடம் ஆகிய நான்கு வட்டங்களையும், 195 வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளது.

» அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய இரு நகராட்சிகளும், உடையார்பாளையம், வரதராஜன்பேட்டை ஆகிய இரு பேரூராட்சிகளும் உள்ளன.

### எல்லைகள்

அரியலூர் மாவட்டம் வடக்கே கடலூர், தெற்கே தஞ்சாவூர், கிழக்கே கடலூர் மற்றும் தஞ்சாவூர், மேற்கே பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

### வட்டம்

1. ஆண்டிமடம்
2. அரியலூர்
3. உடையார்பாளையம்
4. செந்துறை